1980 ஜூலை 26]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படுமோ, அவ்வளவு விரைவில் மேற்கொள்ள முயற்சிகள் செய்யப்படும்.

மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம்.

¬ **வினா எண் 53—திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம் எப்பொழுது முதல் செயல்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மன்னார்குடி தாலுக்கா மூவா நல்லூர் கிராமத்தில் இறைவைப் பாசனத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கேட்டிருப்பது எப்பொழுது முதல் செயல்படும் என்று, ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, திரைப்பட விளம்பரம் மாதிரி விரைவில் செயல்படத் துவங்கும் என்று சொல்லி விட்டார். எப்போது என்பதை சரியாகச் சொல்ல இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

வீரசோழனாற்றில் திருகு மதகு கட்டும் திட்டம்.

* **வினா எண். 54—திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம் எடக்குடி எல்லையில் வீரசோழனாற்றில் 79/12 மைல் திருகு மதகு கட்டும் திட்டம் இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலை துவங்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) வீரசோழனாற்றில் 79/1 மைலில் ரெகுலேட்டர் கட்டுவதற்கான திட்டம் ரூ. 3 லட்சத்திற்கு தயாரிக்கப் பட்டுள்ளது. இவ்வேலையை காவிரி டெல்டா பகுதியை நவீனமாக்கும் திட்டத்தில் ஒரு பகுதியாக, 1980-81-ம் நிதி ஆண்டில் எடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வேலை நடப்பு பாசன அடைப்பு காலத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : இந்த வீரசோழனாற்றில் 79/12 என்ற இடத்தில் ரெகுலேட்டர் கட்டுவதால் எவ்வளவு கிராமங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்? அதனால் பயன் அடையக் கூடிய விவசாயிகள் எவ்வளவு பேர்கள்? அதனால் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஏற்கனவே இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட வேலை துவங்கப்படாமல் உள்ளதா என்ற கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மற்ற விளக்கங்களுக்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : வீரசோழனாற்றில் இன்னும் பக்கத்தில் ஏதாவது ரெகுலேட்டர் கட்ட திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆய்வில் இல்லை.

கெலவரப்பள்ளி அணைத் திட்டம்.

* **வினா எண் 55—திரு. மு. ப. முனுசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெலவரப்பள்ளி அணைத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) கெலவரப்பள்ளி நீர்த் தேக்கத் திட்டத்தில் 99 சதவீதம் மண் அணை அமைக்கும் வேலைகளும் 73 சதவீதம் கல் கட்டிட அணை அமைக்கும் வேலைகளும் முடிக்கப் பட்டுள்ளன. குறுக்கு கல் கட்டிடம் கட்டும் பணி 27 சதவீதம் முடிக்கப் பட்டு விட்டதுடன் 14 கி.மீ. இடப்புற கால்வாய் மற்றும் 9.5 கி.மீ. வலப்புற கால்வாய் தோண்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இதற்கிடையில் இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அரசு வெளியிட்ட அறிக்கையினை எதிர்த்து சில நிலச் சுவான்தார்கள் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளனர். அம்மனுவின் பேரில் உயர்நீதி மன்றம் இத்திட்டத்தின் பணிகளுக்கு தடுப்பு உத்திரவு பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக இத்திட்டத்திற்கான பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.